# அன்மைக்கால அருளாளர்கள்

அன்மைக்கால அருளாளர்கள் இந்தியாவில் வாழ்ந்தவர்கள்

- ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்
- விவேகானந்தர்
- பாம்பன்சுவாமிகள்

## ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்:

- 19 ஆம் நூற்றாண்டின் இந்தியாவின் தலைசிறந்த ஆன்மிகவாதிகளுள் ஒருவராவார். இவர் விவேகானந்தரரின் குரு ஆவார்.
- அனைத்து மதங்களும் ஒரே இறைவனை அடையும் வெவ்வேறு வழிகளே என்பதை தன் அனுபவங்கள் மூலம் உணார்ந்து அதையே வலியுறுத்தியவர்.
- பிப்ரவரி 18, 1836 - ஆம் ஆண்டு கதாதர் -திராம்- சந்திரமணி தேவி தம்பதியருக்கு நான்காவது குழந்தையாக மேற்கு வங்காளத்திலுள்ள "காமாரார்புகூர்" என்னும் சிறிய கிராமத்தில் பிறந்தார்.
- சிறு வயதிலிருந்தே பக்தி பாடல்களைப் பாடுவதிலும், புராணக் கதைகளைக் கேட்பதிலும், இறைவனின் திருவுருவமேனியை களிமண்ணில் செய்வதிலும் ஆர்வமாக இருந்தார்.
- காளி உபாசகராக இருந்தார். தட்சிணேசுரம் காளிகோயிலில் அர்ச்சகராகப் பணியாற்றினார். தினமும் கோயிலின் அருகில் இருந்த பஞ்சவடி என்ற காட்டுப் பகுதியில் காளியை நினைத்து தியானம் செய்தார்.
- காளியின் தரிசனத்தைக் காண முயன்றும் அவரால் இயலாத போது, இறுதியில் காளிசிலையின் கைகளில் இருந்த வாளால் தற்கொலை செய்து கொள்ள முயன்றார். அப்போது பேரானந்த ஒளி அவரை ஆட்கொண்டது.

- சுற்றத்தார் சாரதாமணி என்ற பெண்களை அவருக்கு மணம் முடித்து வைத்தனர். பெண்ணை காளியின் வடிவமாக நினைத்த அவர் ஒருநாள் மனைவியை காளியாக நினைத்து பூஜை செய்து அவரது கால்களில் விழுந்து வணங்கினார்.
- பைரவி பிராம்மணி என்ற பெண்மணியிடம் தாந்திரிக சாதனைகளை கற்றுத்தேர்ந்தார்.
- தோதாபுரி என்பவாரிடம் அத்வைத வேதாந்தம் கற்றார். அதன்பின் "நிர்விகல்பவ சமாதியில்" ஆறுமாதங்கள் இருந்தார்.
- அப்போது ராமர்-சீதை, கிருஷ்ணன்-ராகை, இயேசு, நபிகள் நாயகம் ஆகியோர் அவருக்கு காட்சியளித்ததாகக் கூறினார்.
- இவருடைய சீடர்களில் முக்கியமானவர் விவேகானந்தர் ஆவார். இராமகிருஷ்ணருடன் அன்றாடம் பழகி வந்த மகேந்திரநாத் குப்தா என்பவரர் எழுதிய டைரி குறிப்புகளே பின்னாளில் "ஸ்ரீராமகிருஷ்ணாரின் அமுத மொழிகள் " என்ற பெயரில் தொகுக்கப்பட்டது.
- இறுதி நாட்களில் தொண்டைப் புற்றுநோய் அவரை தாக்கியது. அவருடைய சீடர்கள் காசிப்பூர் என்ற இடத்தில் தோட்ட வீட்டில் வைத்து வைத்தியம் செய்தனர். எனினும் வைத்தியம் பலனிக்காமல் 1886, ஆகஸ்ட் 16 அன்று மகா சமாதியடைந்தார்.

## ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் பொன்மொழிகள்:

- பிறர் எதைச் செய்ய வேண்டுமென்று நீ விரும்புகிறாயோ, அதையே நீ செய்.
- மனிதர்கள் புகழ்வதும் விரைவு, இகழ்வதும் விரைவு, எனவே மற்றவர்கள் உன்னைப் பற்றிக் கூறும் வார்த்தைகளைப் பொருட்படுத்தாதே.
- பாவமும், பாதரசமும் எளிதில் ஜீரணமாகாது.
- ஆசையை அகற்றிப் பற்றுதலற்றுக் கர்மம் புரிவதே உனக்கான சிறந்த வழியாகும்.
- உன்னிடம் தீவிர நம்பிக்கை இருக்குமானால் நீ மனமுருகித் தேடும் பொருள் உனக்கு கிடைக்கும்.
- கோபத்தில் மனிதனுக்கு பகுத்தறிவு போய் விடுகிறது.
- உபதேசம் செய்பவர்கள் பலர், பின்பற்றி நடப்பவர்களோ சிலர்.

- ❖ பக்தியையும் பிரேமையையும் பற்றிய ரகசியங்களைத் தினமும், உன் ஆயுள் உள்ளளவும் கற்றுக்கொள், அது உனக்கு எப்போதும் பலனைத் தரும்.
- ❖ ஒருவனுடைய குணதோஷங்கள் அவனுடைய சகவாசத்தைப் பொருத்து அமைகின்றன.

## விவேகானந்தர்

- ❖ 19-ஆம் நூற்றாண்டின் இந்தியாவின் தலைசிறந்த சமயத் தலைவர்களுள் ஒருவராவார். இவரது இயற்பெயர் நரேந்திரநாத் தத்தா. இராமகிருஷ்ண பரமஹம்சாரின் முக்கியச் சீடராவார்.
- ❖ இந்தியாவிலும் மேலைநாடுகளிலும் அத்வைத தத்துவங்களை அடிப்படையாக கொண்டு பல சொற்பொழிவுகளை ஆற்றியுள்ளார்.
- ❖ விவேகானந்தர் 1863 ஆம் ஆண்டு ஜனவரி 12-ஆம் நாள் விசுவாநாத் தத்தா-புவனேஸ்வரி தேவி என்ற தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார்.
- ❖ கல்கத்தாவில் பிறந்த இவரது தாய்மொழி வங்காளமாகும். இளம் வயதில் சிறந்த விளையாட்டு வீரராகத் திகழ்ந்தார். சிறந்த பகுத்தறிவாதியான இவர் சிறுவயதிலிருந்தே தியானம் செய்யும் பழக்கத்தை மேற்கொண்டிருந்தார்.
- ❖ பள்ளிப்படிப்பு முடித்தவுடன் கல்கத்தாவில் உள்ள மாநிலக் கல்லூரியிலும், பின்னர் ஸ்காட்டிஷ் சர்ச் கல்லூரியிலும் பயின்றார். தத்துவத்தை முதன்மைப் பாடமாகக் கொண்டு பயின்றார்.
- ❖ இறைத்தத்துவங்கள் பற்றிய பல ஐயங்கள் அவர் மனதில் தோன்றின. இறைவனின் படைப்பில் பல முரண்பாடுகள் இருப்பதாகக் கருதினார். இது பற்றி பலரிடம் விவாதித்தும் அவரது ஐயங்களுக்கு தெளிவு கிடைக்கவில்லை.
- ❖ இவரது சகோதரர் பூபேந்திரநாத் தத்தா இந்திய விடுதலைப் போராட்ட வீரராவார்.
- ❖ கி.பி.1881-இல் முதன் முதலாக இராமகிருஷ்ணரை சந்தித்தார். எதையுமே பகுத்தறிவுடன் சிந்திக்கும் விவேகானந்தரால் முதலில் இராமகிருஷ்ணாரின் கொள்கைகளை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

- பின்னர் இராமகிருஷ்ணாரின் ஈடுபாட்டால் பக்திமார்க்கம், ஞானமார்க்கம் இரண்டின் முக்கியத்துவத்தையும் உணார்ந்து கொண்டார்.
- இராமகிருஷ்ணரின் மறைவுக்குப் பின் துறவிகளான சீடர்களில் இவரும் ஒருவராவார். நான்கு ஆண்டுகள் இந்தியா முழுவதும் சுற்றி வந்த மக்களின் கலாச்சாரம், பண்பாடு, வாழ்க்கை முறை ஆகியவற்றை அறிந்து கொண்டார்.
- டிசம்பர் 1892-இல் கன்னியாகுமரி சென்ற விவேகானந்தர் அங்கே கடல் நடுவே மூன்று நாட்கள் ஒரு பாறை மீது அமர்ந்து தியானம் செய்தார். அந்த பாறை ”விவேகானந்தர் பாறை” என்று அழைக்கப்படுகிறது.
- 1893 - ஆம் ஆண்டு சிகாகோவில் நடைபெற்ற உலக சமய மாநாட்டில் கலந்து கொண்டு ”சகோதர, சகோதாரிகளே” என்று ஆரம்பித்து அவர் ஆற்றிய சொற்பொழிவிற்கு மிகுந்த வரவேற்பு கிடைத்தது. மேலைநாடுகளில் வேதாந்த கருத்துகளை அறிமுகப்படுத்தினார்.
- இவர் வெளிநாடு செல்வதற்கு தேவையான உதவிகளையும், வெளிநாட்டிலிருந்து வந்த போது சிறப்பான வரவேற்பையும் அளித்து இவரைப் பெருமைப்படுத்தியவர் இராமநாதபுர மன்னர் பாஸ்கர சேதுபதி ஆவார்.
- இவருடைய முக்கிய சீடர்கள் சகோதரி நிவேதிதா, சுவாமி சதானந்தர், அளசிங்கப் பெருமாள் ஆவர்.
- கல்கத்தாவில் இராமகிருஷ்ணமடத்தை நிறுவி பல தொண்டுகள் செய்தார்.
- 1902-ஆம் ஆண்டு ஜுலை -4 ஆம் நாள், தனது 39வது அகவையில் பேலூரில் விவேகானந்தர் காலமானார்.

## விவேகானந்தரின் கருத்துகள்:

- மனிதர்கள் இயல்பிலேயே தெய்வீகமானவர்கள் என்றும் இந்த தெய்வீகத்தை வெளிப்படுத்துவதே மனித வாழ்வின் நோக்கமாகும்.
- மக்கள் சேவையே மகேசன் சேவை. ’ரிஷிகளிடமும், சமூகத்தில் ஒரு பிரிவினரிடமும் மட்டுமே பரவியிருக்கும் ஆன்மிகம் சமூகத்தில் அனைவரிடமும் பரவ வேண்டும்.”
- வேதாந்த கருத்துகளைப் பின்பற்றி செயல்படும் ஒருவர், எந்தப் பணியைச் செய்தாலும் அதை சிறப்பாகச் செய்ய முடியும்.

## விவேகானந்தரின் பொன்மொழிகள்

- நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய். சுயநலம் என்பதை அறவே தூர எறிந்துவிட்டு வேலை செய்யுங்கள்.
- நமது நாடு வீரர்களை வேண்டி நிற்கிறது. வீரர்களாகத் திகழுங்கள்.
- உண்மைக்காக எதையும் துறக்கலாம். ஆனால் எதற்காகவும் உண்மையைத் துறக்கக்கூடாது.
- கடவுள் இருந்தால் அவனை நாம் காண வேண்டும். ஆத்மா இருந்தால் அதனை நாம் உணர வேண்டும். அப்படி இல்லையென்றால் நம்பிக்கையில்லாமல் இருப்பது நன்று. பாசாங்கு செய்வதை விட நாத்திகனாக இருப்பதே மேல்.
- உலகின் குறைகளைப் பற்றி பேசாதே. குறைகளை எண்ணி வருத்தப்படு. எங்கும் குறைகளை நீ காண்பாய். ஆனால், நீ உலகுக்கு உதவி செய்ய விரும்பினால் உலகைத் தூற்றாதே. குறை சொல்லி உலகை இன்னும் பலவீனப்படுத்தாதே.
- உலகிலுள்ள தீமைகளைப் பற்றியோ நாம் வருந்துகிறோம். நம் உள்ளத்தில் எழும் நச்சு எண்ணங்களைப் பற்றி சிறிதும் கவலை கொள்வதில்லை. உள்ளத்தை ஒழுங்குபடுத்தினால் உலகமே ஒழுங்காகிவிடும்.

<u>கவிதைகள்</u>:

- ”கடவுளைத் தேடி” என்னும் தலைப்பில் வங்கமொழியில் இவர் எழுதியுள்ள கவிதைகளை, தமிழில் திருமதி சௌந்தரா கைலாசம் என்பவர் மொழிபெயர்த்துள்ளார்.

எழுமின்! விழுமின் !

- விவேகானந்தர் ஆற்றிய சொற்பொழிவுகள் அவருடைய கூற்றான, எழுமின்! விழுமின் ! என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ளன. முதலில் இந்தத் தொகுப்பு நூல் ”ஞானதீபம்” என்ற பெயரில் வெளிவந்தது.

<u>வேகானந்தரின் நினைவு மண்டபம்:</u>

- கன்னியாக்குமரியில் இருக்கும் விவேகானந்தர் பாறையின் மேல் அமைந்துள்ளது. 1892 - ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25-ஆம் தேதி கன்னியாகுமரி வந்த விவேகானந்தர் கடலுக்குள் நீந்திச் சென்று அங்கிருந்த பாறையில் அமர்ந்து மூன்று நாட்கள் கடுந்தவம் செய்த இடத்தில் இம்மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இம்மண்டபம் 1972-ஆம் ஆண்டு திறக்கப்பட்டது.

<u>விவேகானந்தரின் கேந்திரம்:</u>

.

- சுவாமி விவேகானந்தரின் போதனைகளைப் பரப்ப, ஜனவரி 7, 1972-ல் ஏக்நாத்ஜி ரானாடேவால் கன்னியாகுமரியில் தோற்றுவிக்கப்பட்டது.
- இவ்வமைப்பின் மூலம் யோகா வகுப்புகள், பண்பாட்டு வகுப்புகள், ஆன்மிகச் சொற்பொழிவுகள், ஆளுமைத்திறன் பயிற்சி முகாம்கள் நடத்தப்படுகின்றன.

<u>சமர்த்த பாரத பருவம்:</u>

- ஆண்டுதோறும் டிசம்பர் 25, 26, 27 ஆகிய மூன்று நாட்கள், விவேகானந்தர் கன்னியாகுமரியில் தவம் செய்த நாட்களின் நினைவாகக் கொண்டாடப்படுகிறது.

வாய்மையே வெல்லும்

<u>குருபூர்ணிமா</u>

- ❖ மூதாதையர்களின் நினைவாகக் கொண்டாடப்படுகிறது.

<u>சர்வதேச சகோதர தினம்:</u>

- ❖ சுவாமி விவேகானந்தர் சிகாகோ சமயமாநாட்டில் உரையாற்றிய தினமான செப்டம்பர் 11-ஆம் நாள் கொண்டாடப்படுகிறது.

<u>கீதை ஜெயந்தி:</u>

- ❖ பகவத் கீதையின் சிறப்பை எடுத்துரைக்க கொண்டாடப்படுகிறது.

<u>சாதனாதினம்:</u>

- ❖ விவேகானந்த கேந்திர நிறுவனர் ஏக்நாத்ஜி ரானடேவின் பிறந்தநாளான நவம்பர் 19ம் நாள் கொண்டாடப்படுகிறது.

## <u>விவேகானந்தர் இல்லம்:</u>

- ❖ சென்னையில் திருவல்லிக் கேணியில் அமைந்துள்ளது சிகாகோவில் உரையாற்றிவிட்டு தாயகம் திரும்பிய விவேகானந்தர் 1897-ம் ஆண்டு பிப்ரவரி 6- ம் தேதி முதல் 15-ஆம் தேதி வரை இந்தக் கட்டடத்தில் தங்கியிருந்து ஒன்பது சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்.
- ❖ அதன்பின் இந்தக் கட்டடம் இராமகிருஷ்ண மடமாக செயல்பட்டு வந்தது. தற்போது விவேகானந்தர் இல்லமாக மாற்றப்பட்டுள்ளது. இராமகிருஷ்ண மடம் தற்போது மயிலாப்பூரில் செயல்பட்டு வருகிறது.

## விவேகானந்தரின் புரட்சி கருத்துகள்:

- ”துறவிகளின் நடுவில் நான் ஒரு புரட்சியாளர்” ”புரட்சியாளர்களின் நடுவில் நான் ஒரு துறவி” என்று கூறினார்.
- எனக்கு உருவம் இல்லை. நான் உருவம் இல்லாத துறவி என்று துணிந்து கூறியவர்.
- ”இந்த இகலோகத்தில் ஒரு கவளம் சோற்றுக்கு அலைய விட்டுவிட்டு, வேறு ஏதோ சொர்க்கத்தில் நிரந்தர ஆனந்தம் அளிக்கிறேன் என்று ஒரு கடவுள் சொன்னால், அந்த கடவுள் எனக்கு தேவையில்லை” என்று நாத்திகம் பேசிய ஆன்மிகவாதி.
- குருநாதரை ”ஸ்ரீ இராமகிருஷ்ண பரப்பிரம்மம்” என்று கூறினார்.
- சுவாமி விவேகானந்தர் வாழ்ந்த காலம் ஆங்கிலேயரிடம் பாரதம் அடிமைப்பட்டிருந்த காலமாகும். அப்போது சுதந்திரப் போராட்ட வீரர்களைப் பார்த்து சுவாமிஜி ஒரு கேள்வி கேட்டார். அதற்கான விடை இன்றளவும் கிடைக்கவில்லை. ”சுதந்திரம் வேண்மென்றால் அதை இரண்டு நாட்களில் என்னால் கொண்டு வந்து விட முடியும். ஆனால் பெற்ற சுதந்திரத்தை பேணி காக்க மனிதர்கள் எங்கே?” என்று 1897-இல் கேட்டார்.
- ”இந்திய சுதந்திரத்தைக் கட்டிக் காக்க தேவையானது கல்வி. அந்தக் கல்வி பல்கலைக்கழகங்கள் வழங்கும் பட்டமல்ல. மனிதனை உருவாக்குகிற கல்வி தேவை” என்றார்.
- விவேகானந்தரின் பிறந்தநாள் ”இளைஞர்கள் தினமாகக்” கொண்டாடப்படுகிறது.

# பாம்பன் சுவாமிகள்:

- 1848-ஆம் ஆண்டு இராமேஸ்வரததில் சாத்தப் பிள்ளைக்கும் செங்கமலம் அம்மையாருக்கும் பாம்பன் சுவாமிகள் பிறந்தார்.
- பெற்றோர் இவருக்கு இட்டப்பெயர் அப்பாவு,
- சேஷகிரியார் என்ற பெரியவர் இவருக்கு வைத்தப்பெயர் குமரகுருதாசர் என்பதாகும்
- சுவாமிகள் சொந்த ஊர் பாம்பன் என்பதால் பாம்பன் சுவாமிகள் என அழைக்கப்பட்டார்.
- முருகன் மீது அளவற்ற பக்தி கொண்டு இளவயதிலேயே முருகப் பெருமான் மீது பாடல்கள் இயற்ற ஆரம்பித்து விட்டார்.
- ஆரணகிரிநாதரை தன் ஞானகுருவாக கொண்டார்.
- அருணகிரிநாதருக்கு முத்தைத்தரு என்று தொடக்கம் முருகனுக்கு அருளப்பட்டது போல இவருக்கும் முருகனால் "கங்கையை சடையில் தரித்து" என்னும் அடிகள் எடுத்துக் கொடுக்கப்பட்டது.
- இரண்டாம் அருணகிரிநாதர் என்று அழைக்கப்பட்டார். அருணகிரிநாதர் வழியில் சித்ரைக் கவிலகள் எழுதியுள்ளார்
- 20 ஆண்டுகள் இல்லற வாழ்வில் இருந்து பின் துறவறம் மேற்கொண்டார்.
- முருகப் பெருமானை முழுமுதற்கடவுளாகக் கொண்டு 6666 பாடல்களையும் 32 வியாசங்களையும் இயற்றியுள்ளார்.
- ஒருநாள் தனது நண்பரிடம் துறவு பூணுவதற்கு பழனி செல்லப் போவதாய் கூறினார்.
- அதற்கு அவர் முருகனிடமிருந்து உத்தரவு கிடைத்ததா என வினவ கிடைத்து விட்டது என பாம்பன் சுவாமிகள் பொய் கூறிவிட்டார்.
- அன்றிரவு முருகன் பாம்பன் சுவாமிகள் முன் தோன்றி பொய் கூறியதற்காக கோபித்துக் கொண்டார்.
- உடனே பாம்பன் சுவாமிகள் நடுநடுங்கி துறவறத்தின் மேல் உள்ள ஆசையினால் அவ்வாறு கூறிவிட்டதாக மன்னிப்பு கேட்டார்.
- மேலும் முருகன் அழைக்காமல் தனா் பழனிக்கு வருவதில்லை என வாக்களித்தார்.

- ❖ அவரது இறுதிக்காலம் வரை அழைப்பு வரவேயில்லை. எத்தனையோ தலங்களுக்குச் சென்ற பாம்பன் சுவாமிகள் பழனிக்கு மட்டும் செல்லவேயில்லை.
- ❖ மேற்கண்ட நிகழ்வு நடந்தது 1881-ஆம் ஆண்டு ஆடிமாதம் சுக்கிரவாரம் ஆகும்.
- ❖ சுமாமிகளின் அடியார்கள் ஆண்டுதோறும் அந்தநாளை நினைவுக்கூர்ந்து அந்நாளில் சத்தியம் தவறாமல் நடப்பதாக உறுதி புணுகிறார்கள். அந்த நாள் சத்திய திருநாளாகக் கொண்டாடப்படுகிறது.
- ❖ இவர் இயற்றிய "சண்முகக் கவசம்" மிகவும் புகழ்பெற்றது.
- ❖ இவருடைய தமிழாசிரியர் பெயர் முனியாண்டிப் பிள்ளை ஆவார். இவரது வடமொழி ஆசிரியர் சேதுமாதவ அய்யா் ஆவார்.
- ❖ சிறுவயதில் இவரை ஈத்த கந்தசஷ்டி கவசம் பின்னாளில் சண்முகக் கவசம் இயற்ற தூண்டுதலாக இருந்தது.
- ❖ 1894-ஆம் ஆண்டு பிரப்பன் வலசை என்ற ஊரில் நிஷ்டையில் இறங்கினார்.
- ❖ திரு.வி.க அவர்களுடன் நெருங்கிய நட்பு கொண்டிருந்தார்.
- ❖ ஒருமுறை குதிரைவண்டியின் சக்கரம் இவரது கால் மீது ஏறிவிட்டதால் கால் எலும்பு முறிந்துவிட்டது.
- ❖ அதனால் பொது மருத்துவனையில் சேர்க்கப்பட்டார். அப்போது சுவாமிகளின் வயது 73. மருத்துவர்கள் குணமடைவது கடினம் என்று கூறிவிட்டனர்.
- ❖ ஆனால் சுவாமிகள் தொடர்ந்து சண்முகக் கவசம் பாடி வந்தமையால் மயில் வாகனத்தில் வந்த முருகன் அருளால் கால் எலும்பு சேர்ந்து குணமடைந்தார்.
- ❖ அந்த நாள் "மயுர சேவன விழா" என ஆண்டுதேறும் மார்கழி மாதத்தில் கொண்டாடப்படுகிறது.
- ❖ 30.05.1929-இல் தம் திருவுருவை மறைத்து சென்னை திருவான்மியூரில் மகாசமாதி அடைந்தார்.

## பாம்பன் சுவாமிகள் இயற்றிய நூல்கள்:

- சண்முக கவசம்,
- பரிபுஜன பஞ்சாமிர்த வண்ணம்,
- குமரகுருதாச சுவாமிகள் பாடல்,
- ஸ்ரீமத் குமார சுவாமியம்,
- திருவலங்கற்றிரட்டு,
- திருப்பா காசியாத்திரை,
- சிறு நூற்றிரட்டு,
- சீவயாதனா வியாசம்,
- பரிபுரணானந்த போதம்,
- செக்கர்வேள் செம்மாப்பு,
- செக்கர் வேள் இறுமாப்பு,
- கராலய ரகசியம்,
- கமரவேள் பதிற்றுப் பத்தந்தாதி,
- சேந்தன் செந்தமிழ் குமாரஸ்தவம்,
- தென்னாட்டுத் திருத்தல் தரிசனம்,
- பத்துப் பிரபந்தம்,
- ஆனந்தக் களிப்பு,
- சமாதான சங்கீதம்,
- சண்முக சகச்சிர நாமார்ச்சனை.

------****-----****----